UNIT – IV

SUBNAME – சிறு இலக்கியம்

CLASS – I MA TAMIL

CODE – GTA12

அறிந்து கொள்வோம் என்று நினைத்து வீசுகின்ற காற்றுக்கு முன்னால் அவ்விளக்கை அறிவுடையவர்கள் கொண்டு சொல்ல மாட்டார்கள். அதுபோல ஆராய்தறிந்த அறிவு உடையவர்கள் பயன்தரத்தக்க செயல்களை, முயற்சி இல்லாமல் செய்யாமல் வைத்துக் கொண்டு ஊழ்வினையால் வரக்கூடிய நன்மைகள் முயற்சி செய்யாமல் இருப்பதால் கைவிட்டுப் போகாது என்று நினைத்துக் கொண்டு செயல்படாமல் இருக்க மாட்டார்கள்.

**கருத்துச் சுருக்கம் :** எல்லாம் முன்வினைப் பயன்படி நடக்கும் என்று சான்றோர்கள் முயற்சி செய்யாமல் இருக்க மாட்டார்கள்.

### முயற்சியால் விதியை வெல்லுதல்

50. **உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே - உலகறியப்
பால்முளை தின்று மறலி உயிர்குடித்த
கால்முளையே போலுங் கரி.**

**பதவுரை :** உலையா முயற்சி - சோர்வில்லாத முயற்சியை, களைகண் ஆக - தொடர்ந்து பற்றிக் கொண்டு, ஊழின் வலி - முன் வினையின் வலிமையை, சிந்தும் - அழிக்கின்ற, வன்மையும் உண்டே - வலிமை உண்டு, உலகறிய - உலகம் அறிய, பால் முளை தின்று - பழமையான வினையின் தோற்றமாகிய முளையைத் தின்று, மறலி உயிர் குடித்து - இயமனின் உயிரையும் எடுத்த, கால்முளையே - மார்க்கண்டேயனே இதற்கு, கரி - சான்றாவான்.

**தெளிவுரை :** சோர்வில்லாத முயற்சியைத் தொடர்ந்து பற்றிக் கொண்டு முன்வினையின் வலிமையை அழிக்கின்ற வலிமை உண்டு. உலகம் அறியப் பழமையான வினையின் தோற்றமாகிய முளையைத் தின்று இயமனின் உயிரையும் எடுத்த மார்க்கண் டேயனே இதற்குச் சான்றாவான்.

**கருத்துச் சுருக்கம் :** முயற்சி செய்தால் கடுமையான விதியையும் வெல்லலாம்.



### தெரிந்து முயற்சி செய்தல்

51. **காலம் அறிதாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து - மேலும்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும்.**

**பதவுரை :** காலம் அறிந்து - எச்செயலையும் செய்தற்குச் சரியான காலத்தை உணர்ந்து, இடம் அறிந்து - செயலை வெற்றியுடன் முடிப்பதற்குத் தகுந்த இடத்தை அறிந்து, செய்வினையின் மூலம் அறிந்து - செய்கின்ற செயலின் ஒவ்வொரு பாகத்தையும் கவனமுடன் ஆராய்ந்து, விளைவு அறிந்து - செயலால் விளையும் பயனை அறிந்து, மேலும் - அதன் பின்னும், சூழ்வனதாம் சூழ்ந்து - ஆராய்ந்து தெளிய வேண்டு வனவற்றை ஆராய்ந்து, துணைமை வலிதெரிந்து - செயலை முடிக்கத் துணையாக இருப்பவர்களின் திறனை அறிந்து, ஆள்வினை ஆளப்படும் - முயற்சி செய்யப்படும்.

**தெளிவுரை :** எச்செயலையும் செய்வதற்குச் சரியான காலத்தை உணர்ந்திருத்தல், செயலை வெற்றியுடன் முடிப்பதற்குச் சரியான இடத்தைத் தேர்வு செய்தல், செயலின் ஒவ்வொரு பாகத்தையும் கவனமாக ஆராய்தல், செயலால் விளையும் பயனை அறிதல்;

அதன்பின் ஆராய்ந்து தெளிவடைய வேண்டியவற்றை ஆராய்ந்து தெளிவுபெறுதல், செயலை முடிக்கத் துணையாக இருப்பவர்களின் வலிமையை அறிந்திருத்தல் என்னும் இவை எண்ணிய முடிப்பாரின் செயல்களாகும்.

**கருத்துச் சுருக்கம் :** ஒரு செயலைத் திறம்பட முடிக்க, காலம் இடம் துணை, விடாமுயற்சி என்பன இன்றியமையாதனவாகும்.

### கடமையைக் கண்ணாகக் கருதுபவரின் செயல்

**52. மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்**
**கருமமே கண்ணாயி னார்.**

**பதவுரை :** கருமமே கண்ணாயினார் - எடுத்துக் கொண்ட செயலைத் திறம்பட முடிக்கும் வல்லமை கொண்டவர், மெய் வருத்தம் பாரார் - உடம்பின் சோர்வினை ஒரு பொருட்டாகக் கருதமாட்டார், பசி நோக்கார் - பசித்துன்பத்தின் மேல் கவனம் செலுத்த மாட்டார், கண் துஞ்சார் - உறக்கம் கொள்ள மாட்டார்கள், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - தனக்கு யார் துன்பம் செய்தாலும் அவற்றை ஒரு பொருட்டாக நினைக்க மாட்டார்கள், செவ்வி - காலத்தின், அருமையும் பாரார் - அருமையினையும் பார்க்க மாட்டார்கள், அவமதிப்புங் கொள்ளார் - பிறர் செய்யும் தூற்றுதல்களையும் கவனத்தில் கொள்ள மாட்டார்கள்.

**தெளிவுரை :** எடுத்துக் கொண்ட செயலைத் திறம்பட முடிக்கும் வல்லமை கொண்டவர்கள் உடலால் ஏற்படும் சோர்வைக் கவனத்தில் கொள்ள மாட்டார்கள். பசியைத் துன்பமாகக் கருதி அதன்மேல்



கவனம் கொள்ள மாட்டார்கள். உறக்கம் கொள்ள மாட்டார்கள். தனக்கு யார் துன்பம் செய்தாலும் அவற்றை ஒரு பொருட்டாக நினைக்க மாட்டார்கள். காலத்தின் அருமையினையும் பார்க்க மாட்டார்கள். பிறர் கூறும் தூற்றுதல்களையும் கவனத்தில் கொள்ள மாட்டார்கள்.

**கருத்துச் சுருக்கம் :** கடமையை முடிக்கக் கருதியவர்கள் அதனையே கண்ணாகக் கொண் டிருப்பர். துன்பங்களைக் கண்டு பின்வாங்க மாட் டார்கள்.

### சிறிய பகை என்றாலும் தம்மைக் காத்துக் கொள்ளுதல்

**53. சிறிய பகைஎனினும் ஓம்புதல் தேற்றார்**
**பெரிதும் பிழைபா டுடையர் - நிறைகயத்து**
**ஆழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்**
**யானை நிழல்காண் பரிது.**

**பதவுரை :** பகை சிறிய எனினும் - தன்மேல் பிறர் கொண்ட பகை உணர்வு சிறியதாக இருந்தாலும், ஓம்புதல் - அப்பகையில் இருந்து தம்மைக் காத்துக் கொள்வரை, தேற்றார் - அறியாமல் இருப்பவர், பெரிதும் பிழைபாடு உடையர் - மிகவும் குற்றம் உடையவராவார்; ஆழ்கயத்து - ஆழமான குளமாகிய, நீர்நிறைமடுவில் - நீர் நிறைந்த இடத்தில், தவளை குதிப்பினும் - தவளை குதித்தாலும், யானை நிழல் - குளக்கரையில் நிற்கும் யானையின் நிழல், காண்டி அரிது - காண்பதற்குக் கிடைக்காது.

**தெளிவுரை :** தன்மேல் பிறர் கொண்ட பகை உணர்வு சிறியதாக இருந்தாலும் அப்பகையில் இருந்து தம்மைக் காத்துக் கொள்வதை அறியாமல் இருப்பவர்

மிகவும் குற்றம் உடையவராவார். ஆழமான நீர் நிறைந்த குளத்தில் தவளை குதித்தால் அப்போது நீர் கலங்குதலால் கரையில் நின்ற யானையின் நிழலும் நீரில் காண்பதற்குக் கடினமாகும். எனவே பகை சிறியதாக இருந்தாலும் அதனால் வரும் துன்பம் பெரிதெனக் கருதி தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.

**கருத்துச் சுருக்கம் :** பகை சிறியதாக இருந்தாலும் அதனை வலிமை அற்றதாக நினைத்தல் கூடாது.

**மனதில் எழும் தீய எண்ணங்களுக்கு அஞ்சுதல்**

**54. புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப - அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.**

**பதவுரை :** உலகு அனைத்தும் - உலகம் முழுவதும், சொல் ஒன்றின் - ஒரு வார்த்தையால், யாப்பார் - தன்வசப்படுத்தக்கூடிய முனிவர், பல்காலும் - பலமுறை, காமப்பகை - தன்னுள் எழும் காமமாகிய பகையை, பரிந்து ஓம்பி - மிகுந்த வருத்தம் கொண்டு, காப்ப - காத்துக் கொள்வார்கள், அதுபோல, அறிவில் நிறைந்த சான்றோர்கள் புறப்பகை - வெளியில் உள்ள பகை, கோடியின் மிக்குறினும் - கோடி எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தாலும், அஞ்சார் - அப்பகைக்காக அச்சம் கொள்ளாமல், அகப்பகை - மனதில் இருக்கும் பகை, ஒன்று - ஒன்றாக இருந்தாலும், அஞ்சிக்காப்ப - அப்பகை தரக்கூடிய துன்பம் பெரிது என்பதால் அதற்கு அச்சம் கொண்டு காப்பார்.

**தெளிவுரை :** உலகம் முழுவதும் ஒரு வார்த்தையால் தன் வசப்படுத்தக்கூடிய முனிவர் பல முறை தன்னுள் எழும் காமமாகிய பகையை மிகுந்த வருத்தம் கொண்டு



காத்துக் கொள்வது போல அறிவில் நிறைந்த சான்றோர்கள் வெளியில் உள்ள பகை கோடி எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்தாலும் அப்பகைகளுக்காக அச்சம் கொள்ள மாட்டார்கள். ஆனால் மனதில் இருக்கும் பகை ஒன்றாக இருந்தாலும் துன்பத்தைக் கருதி அதன் மேல் அச்சம் கொண்டு காப்பர்.

**கருத்துச் சுருக்கம் :** மனப்பகைகளான புலன்களின் பகையை நீக்குதல் வேண்டும்.

**கூடா நட்பு**

**55. புறநட் டகம் வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டும் - கழிபெருங்
கண்ணோட்டம் செய்யார் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.**

**பதவுரை :** புண் - காயத்தை, கருவியிட்டு ஆற்று வார் - கருவிகளால் அறுத்து அதனைக் குணப்படுத்து வார்கள், அவ்வாறு செய்யாமல், பொதிந்து மூடார் - அதனை மறைத்து மூடி வைக்க மாட்டார்கள், அதுபோல, புறம் நட்டு - வெளிப்பார்வைக்கு மட்டும் நட்புக்கொண்டு, அகம் வேர்ப்பார் - மனதுள் பகை எண்ணம் கொண்டவர்களின், நச்சுப் பகைமை - விடம் போன்ற கொடிய பகையை, வெளியிட்டு - வெளிப்படுத்தி, வேறு ஆதல் வேண்டும் - நீக்கிவிட வேண்டும், கழிபெருங் கண்ணோட்டம் - வஞ்சகமாகப் பகை எண்ணம் கொண்டவர்களிடம் அதிகமான அன்பு, செய்யார் - கொள்ளக்கூடாது.

**தெளிவுரை :** காயத்தைக் கருவிகளால் அறுத்து அதனைக் குணப்படுத்துவார்களே தவிர அதனை

மறைத்து மூடிவைக்க மாட்டார்கள். அதுபோல வெளிப்பார்வைக்கு மட்டும் நட்புக்கொண்டு மனதுள் பகை எண்ணம் கொண்டவர்களின் விடம் போன்ற கொடுமையான ப்கையை வெளிப்படுத்தி நீக்கிவிட வேண்டும். வஞ்சகமாகப் பகை எண்ணம் கொண்டவர்களிடம் அதிமான அன்பு கொள்ளக் கூடாது.

**கருத்துச் சுருக்கம் :** வெளிப்பார்வைக்கு நட்புக் கொண்டு மனதுள் பகை கொண்டவரின் நட்பு தீங்கானது.

### தீய நட்பு

**56. நட்பிடைக் குய்யம்வைத்து எய்யா வினைசூழ்ந்து**
**வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் - திட்பமாம்**
**நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை**
**வாளா கிடப்பன் மறந்து.**

**பதவுரை :** நட்பு இடை - நண்பர்களிடம், குய்யம் வைத்து - வஞ்சக எண்ணம் கொண்டு, எய்யா - யாரும் அறியாமல், வினை சூழ்ந்து - தீமை செய்வதற்கான காலத்தை எதிர்பார்த்து, உட்கார் திறத்தராய் - அவர்களின் பகைவர்களோடு சேர்ந்து கொண்டு, நின்றார்க்கு - நிற்கின்றவர்களுக்கு, திட்பம் ஆம் - வலிமையான, நாள் - ஆயுள்காலம், உலந்தது அன்று - முடிந்தது இல்லை, நடுவன் - இயமன், நடுவுஇன்மை - வஞ்சக என்னும் கொண்டவர்களின் நடுவுநிலை இல்லாத தீமை விளைவிக்கும் செயல்களை, மறந்து - நினைக்காமல், வாளாகிடப்பன் - எச்செயலையும் செய்யாமல் இருப்பான்.

**தெளிவுரை :** நண்பர்களிடம் வஞ்சக எண்ணம் கொண்டு யாரும் அறியாமல் தீமை செய்வதற்கான



காலத்தை எதிர்பார்த்து அவர்களின் பகைவர்களோடு சேர்ந்து கொண்டு நிற்கின்றவர்களுக்கு வலிமையான ஆயுட்காலம் முடிந்தது இல்லை. இயமன் வஞ்சக எண்ணம் கொண்டவர்களின் நடுவுநிலை இல்லாத தீமை விளைவிக்கும் செயல்களை நினைக்காமல் இருக்கிறவரைதான் வஞ்சக எண்ணம் கொண்டவர் களின் உயிர் நிலைத்திருக்கும்.

**கருத்துச் சுருக்கம் :** நண்பர்களாக நடித்து வஞ்சகம் செய்பவர்கள் இயமனின் பார்வை படும்வரைதான் உயிரோடு இருப்பர்.

### மனநலனுக்கான செயல்பாடு

**57. மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்**
**அனைத்தெவையுந் தீயவே யாகும் - எனைத்துணையுந்**
**தீயவே செய்யினும் நல்லவாக் காண்பவே**
**மாசில் மனத்தி னவர்.**

**பதவுரை :** கறுப்பு மனத்த எனின் - கோபம் கொண்டிருப்பவருக்கு, நல்ல செயினும் - நன்மை செய்தாலும், அனைத்து எவையும் - செய்தவை எல்லாம், தீயவே ஆகும் - தீய செயல்களாகவே முடியும், மாசுஇல் மனத்தினவர் - குற்றம் இல்லாத மனத்தை உடையவர்களுக்கு, எனைத்துணையும் - எவ்வளவு தீய செயல்களைச் செய்தாலும், நல்லவாக் காண்பவே - அச்செயல்களை எல்லாம் அவர்கள் நல்ல செயல்களாகவே நினைத்துக் கொள்வார்கள்.

**தெளிவுரை :** கோபம் கொண்டிருப்பவருக்கு நன்மை செய்தாலும் செய்தவை எல்லாம் தீய செயல்களாகவே முடியும். குற்றம் இல்லாத மனத்தை உடையவர்களுக்கு எவ்வளவு தீய செயல்களைச் செய்தாலும்

அதையெல்லாம் அவர்கள் நல்ல செயல்களாகவே நினைத்துக் கொள்வார்கள்.

**கருத்துச் சுருக்கம் :** கோபம் கொண்டவர்களுக்கு நன்மை செய்தலும் தீமையாய் முடியும்.

### இனிமையானவர்களின் கடுமையான சொல் இனிமை உடையது

58. **இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்**
**கனியும் மொழியும் கடுவே - அனல் கொளுத்தும்**
**வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்பொடிப்பச்**
**சிங்கி குளிர்ந்துங் கொலும்.**

**பதவுரை :** அனல் கொளுத்தும் - தீயைப்போலச் சுடுகின்ற, வெங்காரம் - வெங்காரமானது, வெய் தெனினும் - வெப்பத்தைத் தருவதாக இருந்தாலும், நோய் தீர்க்கும் - உடல் நோயினைக் குணப்படுத்திக் குளிர்ச்சி தரும், சிங்கி - விடம், மெய் பொடிப்ப - உடல் மகிழ்ச்சி கொள்ளும்படி, குளிர்ந்தும் கொலும் - குளிர்ச்சியைத் தந்தாலும் கொல்லும் இயல்பு உடையது, அதுபோல, இனியவர் - நல்லவர்கள், என் சொலினும் - எதைக் கூறினாலும், இன்சொல்லே - அவையனைத்தும் இனிய சொற்களாகும், இன்னார் - தீயவர்களின், கனியும் மொழியும் - இனிமையான சொற்களும், கடுவே - விடம் போன்றதாகும்.

**தெளிவுரை :** தீயைப் போலச் சுடுகின்ற வெங்காரம் வெப்பத்தைத் தருவதாக இருந்தாலும் உடல் நோயை நீக்கிக் குளிர்ச்சி உண்டாக்கும். ஆனால் விடம் உடல் மகிழ்ச்சி கொள்ளும்படிக் குளிர்ச்சியைத் தந்து பின்பு கொல்லும். அதுபோல நல்லவர்கள் எதைக் கூறினாலும் அவை அனைத்தும் இனிமையான சொற்களாக இருக்கும். தீயவர்களின் இனிமையான சொற்களும் விடம் போன்றதாக இருக்கும்.



**கருத்துச் சுருக்கம் :** நல்லவர்களின் கடுமையான சொற்கள் இனிமை உடையன. தீயவரின் இனிய சொற்கள் துன்பம் தருவன.

### நல்ல நெறி

59. **பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்**
**எய்தாமை சொல்லின் வழுக்காத்து- மெய்யிற்**
**புலமைந்துங் காத்து மனமாசு அகற்றும்**
**நலமன்றே நல்லாறு எனல்.**

**பதவுரை :** பொய்குறளை - பொய் கூறுவதும் இல்லாதவற்றைக் கூறுவதும், வன்சொல் - கடுமையான சொற்களைக் கூறுதலும், பயனில - பயனில்லாத சொற்களைக் கூறுதலும், என்ற - என்று கூறப்பட்ட, இந்நான்கும் - இவை நான்கும், எய்தாமை - வராமல், சொல்லின் வழுகாத்து - பேசக்கூடிய சொற்களில் ஏற்படும் குற்றங்களை நீக்கி, மெய்யில் புலமைந்துங் காத்து - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் உறுப்புகளை உடலில் கட்டுப்படுத்தி, மனம் மாசு அகற்றும் - மனதில் ஏற்படும் குற்றங்களைக் களையும், நலம் அன்றே - நல்ல செயலே, நல்ஆறு - நல்லநெறி, எனல் - என்று சொல்லத்தக்கதாகும்.

**தெளிவுரை :** பொய் கூறுதல், இல்லாதவற்றைக் கூறுதல், கடுமையான சொற்களைக் கூறுதல், பயனில்லாத சொற்களைக் கூறுதல் என்று சொல்லப்பட்ட நான்கையும் பேசக்கூடிய சொற்களில் இருந்து நீக்கி; மெய்வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து புலன்களையும் உடலில் கட்டுப்படுத்தி மனதில் ஏற்படும் குற்றங்களைக் களையும் நல்ல செயலே நல்ல நெறி என்று சொல்லத்தக்கதாகும்.

**நல்லவர்கள் தீயவற்றைச் செய்யமாட்டார்கள்**

**60. நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்கு ஒருப்படார் - பல்பொறிய
செங்கண் புலிஏறு அறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ்.**

**பதவுரை :** பல் பொறிய - பல புள்ளிகளைஉடைய, செம் கண்புலி ஏறு - சிவப்பான கண்களை உடைய ஆண்புலி, அறப்பசித்தும் - அதிகமான பசி எடுத்தாலும், பைங்கண் புனத்த - பசுமையான வயல்களில் இருக்கும், பைங்கூழ் - பசுமையான பயிர்களை, தின்னாஆம் - உண்ணாது, அதுபோல, நல் ஆறு ஒழுகின் தலை நின்றார் - நல்ல நெறியில் நடப்பதை உறுதியாகக் கொண்டவர்கள், நல் கூர்ந்தும் - வறுமை நிலையை அடைந்தாலும், அல்லன செய்தற்கு - தீமையான செயல்களைச் செய்வதற்கு, ஒருப்படார் - மனம் கொள்ள மாட்டார்கள்.

**தெளிவுரை :** பல புள்ளிகளை உடைய சிவப்பான கண்களை உடைய ஆண்புலி அதிகமான பசி எடுத்தாலும் வயல்களில் விளைந்த பசுமையான பயிரை உண்ணாது. அதுபோல, நல்ல நெறியில் நடப்பதை உறுதியாகக் கொண்டவர்கள் வறுமை நிலையை அடைந்தாலும் தீமையான செயல்களைச் செய்வதற்கு மனம் கொள்ள மாட்டார்கள்.

**கருத்துச் சுருக்கம் :** நல்ல ஒழுக்கம் உடையவர்கள் வறுமையுற்ற காலத்திலும் அறமல்லாச் செயல்களைச் செய்யமாட்டார்கள்.



**முதன்மையாகக் கடைப்பிடிக்க வேண்டியவை**

**61. குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம் விற்றுக் கொள்ளுந் திருவும் - தவம்விற்றாங்கு
ஊனோம்பும் வாழ்வும் உரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்தல் தலை.**

**பதவுரை :** குலம் விற்றுக் கொள்ளும் வெறுக்கையும்- தான் பிறந்த மரபுவழியை மறந்து அதனை விற்றுத் தேடும் பொருட் செல்வமும், வாய்மை நலம் விற்றுக் கொள்ளும் திருவும் - பொய்கூறி அதனால் கிடைக்கின்ற செல்வமும், தவம்விற்று ஊன் ஓம்பும் வாழ்வும் - தவவாழ்க்கையைப் பொருளாக்கி விற்று வாழ்கின்ற வாழ்க்கையும், உரிமை விற்று உண்பதூஉம் - மரபுவழிப் பெரியவர்கள் கொடுத்த பொருள்களை விற்று உண்ணுவதும், என்பவை நம்மை அணுகாமல் காத்துக் கொள்வது, தலை - முதன்மையான கடமையாகும்.

**தெளிவுரை :** தான் பிறந்து வளர்ந்த மரபு வழியை மறந்து அதனை விற்றுத் தேடும் பொருட் செல்வமும், பொய்கூறி அதனால் கிடைக்கின்ற பெருஞ்செல்வமும், தவ வாழ்க்கையைப் பொருளாக்கி விற்று வாழ்கின்ற வாழ்க்கையும், மரபுவழிப் பெரியவர்கள் கொடுத்த பொருள்களை விற்று உண்பதும் எனச் சொல்லப்பட்ட பாவச் செயல்கள் நம்மை வந்தடையாமல் வாழ்வது முதன்மையான கடமையாகும்.

**கருத்துச் சுருக்கம் :** பழியற்ற வாழ்வு நன்மை யுடையதாகும்.